ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය
නීතීවේදී උපාධි පාඨමාලාව 5 වන මට්ටම
අවසාන පරීක්ෂණය 2016/2017
LWU3311/LLU5709 – පරිපාලන නීතිය
කාලය - පැය තුනයි (03)

දිනය : 18.07.2018 වේලාව : ප.ව. 01.30 සිට ප.ව 04.30 දක්වා

ප්‍රශ්න පහකට (05) පමණක් පිළිතුරු සපයන්න.
අපැහැදිළි අත්අකුරු සඳහා ලකුණු අඩුකෙරේ.

1. යුටෝපියා රාජ්‍යයේ 1999 අංක 16 දරන පළාත් පාලන මැතිවරණ පනත යටතේ, තරඟකරුවන් පළාත් පාලන ආයතන සඳහා තේරීපත් වූ සභිකයන් වශයෙන් ප්‍රකාශ කිරීමේ බලය මැතිවරණ කොමසාරිස්වරයාට පවරා ඇත. සේනක, පළාත් පාලන මැතිවරණයේදී "එක්සත් ජනතා පක්ෂයේ" සාමාජිකයෙකු වශයෙන් සමගිපුර නගර සභාව සඳහා තරග කළේය. මැතිවරණයෙන් පසු ඔහුගේ පක්ෂයේ සයදෙනෙකු තේරීපත්වූ අතර ඔහු ලැයිස්තුවේ හත්වැන්නා විය. මුදල් අමාත්‍යවරයාගේ පුද්ගලික ලේකම් ලෙස කටයුතු කළ ලැයිස්තුවේ සයවැන්නා වූ භානුක හා සේනක අතර මනාප දෙකක වෙනසක් පමණක් පැවති බව සේනක සොයාගත්තේ ය. මැතිවරණ දිනයේ දී භානුක ඡන්දපොළට සිවිල් ඇඳුමින් ගොස් ඇති බවත් ඔහු තේරීම්භාර නිලධාරියාගේ මස්සිනා බවත් සේනක පසුව දැනගත්තේ ය.

ඡන්දය ගණන් කිරීමේ මධ්‍යස්ථානයේ දී මනාප ඡන්ද ගණනය කළ ආකාරය පිළිබඳව අතෘප්තිමත් වූ නිසා මනාප ඡන්ද යළි ගණන් කරන ලෙස ඔහු මැතිවරණ කොමසාරිස්වරයාගෙන් ලිඛිතව ඉල්ලා සිටියේය. කෙසේ වෙතත් මැතිවරණ කොමසාරිස්වරයා ඔහුගේ ඉල්ලීම පිළිබඳව කිසිදු පියවරක් නොගත්තේය. මේ අතරතුර තේරීපත් වූ සභිකයන් වැඩ භාරගැනීම සඳහා දිවුරුම් දීමට දින නියමකොට තිබිණ.

මැතිවරණ කොමසාරිස්වරයාගේ අත්තනෝමතික ක්‍රියකලාපයට එරෙහිව කවර නෛතික ප්‍රතිකර්මයක් ඇත්දැයි සේනක ඔබේ උපදෙස් පතයි.

යුටෝපියා රාජ්‍යයේ පළාත් පාලන මැතිවරණ නීති හා පරිපාලන නීති මූලධර්ම ශ්‍රී ලංකාවේ නීති වලට සමානයැයි උපකල්පනය කරමින් සේනකට උපදෙස් දෙන්න.

විනිශ්චිත නඩුතීරණ ආශ්‍රයෙන් ඔබේ පිළිතුර පහදන්න.

(ලකුණු 20)

2. ජාතික සංවර්ධන කාර්යාංශය යනු කැටලෝනියාවේ පාර්ලිමේන්තු පනතක් මගින් ස්ථාපිත ආයතනයකි. පනතේ 5 වන වගන්තිය ප්‍රකාරව සුදුසුකම් සපුරාලන ඕනෑම තැනැත්තෙකුට නැවුම් එළවළු හා පළතුරු අපනයන බලපත්‍ර නිකුත් කිරීමට එම කාර්යාංශයට බලය ඇත.

එහෙත් පනතේ 5(2) වගන්තියේ දක්වා ඇත්තේ සකස්කළ ආහාර අපනයනය කිරීම සඳහා ජාතික සෞඛ්‍යය අධ්‍යක්ෂවරයාගේ අනුමැතියෙන් තොරව බලපත්‍ර නිකුත්කළ නොහැකි බවයි.

එළවළු හා පළතුරු ගොවිපළක හිමිකරුවෙකු වන අසංක, පළතුරු අපනයනය කිරීම සඳහා බලපත්‍රයක් ලබාගැනීමට අයදුම් කළේ ය. කෙසේවෙතත්, කාබනික නොවන ආහාර සඳහා පනතේ 5 වන වගන්තිය යටතේ බලපත්‍ර ලබාදිය නොහැකිය යනුවෙන් පවසා එකී අයදුම් පත්‍රය ජාතික සංවර්ධන කාර්යාංශය විසින් ප්‍රතික්ෂේප කරන ලදී.

මේ අතරතුර, පළතුරු අපනයන කර්මාන්තයේ ප්‍රධාන තරඟකරුවා සුදත් වූ අතර ජාතික සෞඛ්‍යය අධ්‍යක්ෂවරයාගේ අනුමැතිය නොමැතිව කැනඩාවට මිශ්‍ර පළතුරු ජෑම් අපනයනය කිරීම සඳහා ජාතික සංවර්ධන කාර්යාංශය විසින් ඔහුට අපනයන බලපත්‍රයක් නිකුත් කරන ලදී. ජාතික සංවර්ධන කාර්යාංශයේ අධ්‍යක්ෂ ජනරාල් වරයා සහ සුදත් අතර පැවති රහස් ගණුදෙනු හේතුවෙන් අල්ලස් කොමිසම මගින් ඔහු අත්අඩංගුවට ගත් බව සති දෙකකට පසුව පුවත්පත්වල පළකර තිබුණි.

ජාතික සංවර්ධන කාර්යාංශයේ තීරණ වලට එරෙහිව නඩුකරයක් ගොනු කිරීමට අසංක අදහස් කරයි.

ජාතික සංවර්ධන කාර්යාංශයේ ක්‍රියාකලාපය මඟින් පැන නැගෙන ප්‍රශ්න හඳුනාගෙන ඒවා යෝග්‍ය පරිපාලන නීති මූලධර්ම ඇසුරෙන් සාකච්ඡා කරන්න.

(ලකුණු 20)

3. "ව්‍යවස්ථාපිත ආයතනවල තීරණ විමර්ෂණය කිරීමට හෝ ඒවා ශුන්‍ය හා බල රහිත යැයි ප්‍රකාශ කිරීමට ශ්‍රී ලංකාවේ සිවිල් නඩු විධාන සංග්‍රහයේ 217(උ) වගන්තිය මඟින් දිසා අධිකරණ වෙත බලය ලබා නොදේ. දිසා අධිකරණ වෙත බලය ලබා දී ඇත්තේ එහි මුල් අධිකරණ බලය ක්‍රියාත්මක කිරීමට අදාළ ව ප්‍රකාශයක් නිකුත් කිරීමට පමණි" .

මෙම ප්‍රකාශය පරිපාලන නීතියෙහි ප්‍රකාශන ආඥාවන්ට අදාළව සාකච්ඡා කරන්න.

විනිශ්චිත නඩුතීරණ ඇසුරෙන් ඔබේ පිළිතුර පහදන්න.

(ලකුණු 20)

4. බණ්ඩාර, රම්ඩා රාජ්‍යයේ ජාතික තේ සංස්ථාවෙහි (NTC) සුපරීක්ෂකවරයෙකු වශයෙන් වසර 15ක් තිස්සේ සේවය කරමින් සිටියි. සති තුනකට පෙර හඳුනා නොගත් කණ්ඩායමක් විසින් ජාතික තේ සංස්ථාවට අයත් *"සඳගල වත්ත"* වතුයායට ඇතුළු වී වටිනා යන්ත්‍රයක් සොරකම් කර තිබිණ. CCTV කැමරා පරීක්ෂා කිරීමේදී බණ්ඩාර එම සිද්ධිය සිදුවූ දිනයේදී රාජකාරී වේලාවට පසු *"සඳගල වත්ත"* වතුයායට ඇතුළු වී ඇති බව ප්‍රධාන ආරක්ෂක නිළධාරියා සොයාගත්තේ ය.

ජාතික තේ සංස්ථාවේ කළමනාකාරීත්වය විසින් මෙම සිද්ධිය පිළිබඳ පරීක්ෂණයක් පැවැත්වීම සඳහා තිදෙනෙකුගෙන් යුතු කමිටුවක් පත්කළේ ය. එහි සාමාජිකයෙකු වශයෙන් ප්‍රධාන ආරක්ෂක නිළධාරියා ද පත්කරන ලදී. කෙසේ වෙතත් වැඩ භූමියෙහි CCTV කැමරා පද්ධතිය සවිකිරීම සම්බන්ධයෙන් පෙර රැස්වීමකදී ඔවුන් දෙදෙනා අතර උණුසුම් වචන හුවමාරුවක් සිදුවූ බැවින් ප්‍රධාන ආරක්ෂක නිළධාරියාගේ පත්වීම සම්බන්ධයෙන් බණ්ඩාර නොසතුට ට පත්ව සිටියේ ය.

විමර්ෂණ කමිටුවේ සභාපතිවරයා විසින් සඳහා දින චෝදනා පත්‍රයක් බණ්ඩාර වෙත නිකුත්කළ අතර එදිනම පස්වරු 02.00 දක්වා විමර්ශන කමිටුව ඉදිරියේ පෙනීසිටීමට කාලය ලබා දී තිබිණ. විමර්ෂණය අතරතුර, *"සඳගල වත්ත වතුයායේ සති තුනකට පෙර සිදු වූ සොරකම සම්බන්ධයෙන් තමා ද වගකිව යුතු බවට අප සැක කරනවා"* යනුවෙන් ප්‍රධාන ආරක්ෂක නිළධාරියා ප්‍රකාශ කළේය. සාක්ෂිකරුවන්ගෙන් හරස් ප්‍රශ්න ඇසීම සඳහා නෛතික නියෝජනය ලබාගැනීම ට ඉඩදෙන ලෙස බණ්ඩාර කමිටුවෙන් ඉල්ලා සිටියේ ය. ඔහුගේ ඉල්ලීම, කමිටුව ප්‍රතික්ෂේප කළේ ය.

කමිටුවේ අවසාන තීරණය වූයේ බණ්ඩාර සේවයෙන් පහකළ යුතු බවයි. බණ්ඩාර මෙම තීරණය පිළිබඳ නොසතුට ට පත්ව සිටින අතර ඔහු සේවයෙන් පහකිරීම සඳහා හේතු දක්වන ලෙස ඉල්ලා සිටියේ ය. කෙසේ වෙතත් කමිටුව මෙම ඉල්ලීමට ද පිළිතුරු ලබා නොදුණි.

බණ්ඩාර විමර්ෂණ කමිටුවේ තීරණය අභියෝගයට ලක්කිරීමට අපේක්ෂා කරයි.

රැම්ඩා රාජ්‍යයේ පරිපාලන නීති මූලධර්ම ශ්‍රී ලංකාවේ නීති වලට සමානයැයි උපකල්පනය කරමින් බණ්ඩාරට උපදෙස් දෙන්න.

විනිශ්චිත නඩු තීරණ හා ශ්‍රී ලංකාවේ පරිපාලන නීතියේ සමකාලීන වර්ධනයන් ඇසුරෙන් ඔබේ පිළිතුර පැහැදිළි කරන්න.

(ලකුණු 20)

5. ආපදා කළමනාකරණ මණ්ඩලය, ඇන්ටොරියාද් රාජ්‍යයේ 2000 අංක 05 දරන ආපදා කළමනාකරණ පනත යටතේ පිහිටුවන ලද ව්‍යවස්ථාපිත ආයතනයකි. වෙනත් කරුණු අතර ඕනෑම ආපදාවකින් හානියට පත් වූ ගොඩනැගිලි හා නිවාස ප්‍රතිසංස්කරණය කිරීම සඳහා වන්දි ප්‍රදානය කිරීමට මණ්ඩලයට බලය ඇත. පනතේ 4(4) වගන්තිය ප්‍රකාශ කරන පරිදි **"මණ්ඩලයේ තීරණ අවසානාත්මක හා තීරණාත්මක වන අතර කිසිඳු අධිකරණයක් ඉදිරියේ ප්‍රශ්න කළ නොහැක".** කෙසේ වෙතත් රජයේ තක්සේරුකරුගේ තක්සේරු වාර්තාවක් ලබාගැනීමෙන් අනතුරුව පමණක් මණ්ඩලය විසින් වන්දි ප්‍රදානය කළයුතු බව පනතේ 5(1) වගන්තිය තවදුරටත් ප්‍රකාශ කරයි.

ඇන්ටොරියාද් රාජ්‍යයේ රතන්පූර් හි ගංවතුර බලපෑමට ලක්වූ ප්‍රදේශයක වාසය කළ වරුණ, ගංවතුර හේතුවෙන් හානියට පත් සිය ගොඩනැගිල්ල ප්‍රතිසංස්කරණය කිරීම සඳහා වන්දි ලබාගැනීමට අයැදුම් කළේය.

කෙසේ වෙතත් මණ්ඩලයේ සභාපතිවරයා විසින් ඔහුගේ අයදුම්පත ප්‍රතික්ෂේප කළ අතර ඒ පිළිබඳ හේතු දැක්වීම ද ප්‍රතික්ෂේප කළේය. මේ අතරතුර රජයේ තක්සේරුකරුගෙන් වාර්තාවක් ලබා නොගෙන පවා සභාපතිවරයා විසින් එක්තරා දේශපාලන පක්ෂයක ආධාරකරුවන් පිරිසකට වන්දි ප්‍රදානය කොට ඇති බවට පුවත්පත් වල පළවිය.

සති දෙකකට පසුව මාධ්‍ය සාකච්ඡාවකදී මණ්ඩලයේ සභාපති වරයා ප්‍රකාශයක් නිකුත් කරමින් කියා සිටියේ පනතේ 4(4) වගන්තිය ප්‍රකාරව ඔහුගේ කාර්යයන් කිසිවෙකුට ප්‍රශ්නකළ නොහැකි බවයි.

ශ්‍රී ලංකාවේ අර්ථනිරූපන ආඥාපනතට සමාන පනතක් ඇන්ටොරියාද් හි ක්‍රියාත්මක වන බව උපකල්පනය කරමින් ආපදා කළමනාකරණ මණ්ඩලයේ සභාපතිවරයාගේ තීරණය අභියෝගයට ලක්කළ හැකිදැයි වරුණට උපදෙස් දෙන්න.

විනිශ්චිත නඩු තීරණ ආශ්‍රයෙන් ඔබේ පිළිතුර සාකච්ඡා කරන්න.

(ලකුණු 20)

6. "අධිකරණ විමර්ශන බලයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථානුකූල පදනම යටතේ ඕනෑම පරිපාලන ක්‍රියාවක් අධිකරණයට ප්‍රශ්නකළ හැක. කෙසේ වෙතත්, පරිපාලන ක්‍රියා අධිකරණය විසින් විමර්ශනය කිරීම සීමාකරන ඍජු හා වක්‍ර ක්‍රම පාර්ලිමේන්තුව විසින් භාවිත කරනු ලබයි".
ඔබ මෙම ප්‍රකාශය සමග එකඟ වන්නේ ද?

යෝග්‍ය විනිශ්චිත නඩු තීරණ ආශ්‍රයෙන් ඔබේ පිළිතුර සාකච්ඡා කරන්න.

(ලකුණු 20)

7. "රටක් තුළ නීතියේ ආධිපත්‍යය පවත්වාගෙන යාම පිණිස පරිපාලන අධිකාරීන් හට අභිමතානුසාරී බලතල ලබාදීම සාධාරණීකරනය කිරීම මෙන්ම ඒවායේ අභිමතානුසාරී බලතල පාලනය කිරීමේ අවශ්‍යතාව පරිපාලන නීති මූලධර්ම මඟින් හඳුනාගනී. එබැවින් පරිපාලන අධිකාරීන් හි අභිමතය ක්‍රියාවට නැංවීම පාලනය කිරීම සඳහා අධිකරණ විසින් රීති බොහොමයක් වර්ධනය කර ඇත".

**පරිපාලන නීතිය, පිඩුව 01, ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය, 54 පිටුව**

ඔබ මෙම ප්‍රකාශය සමග එකඟ වන්නේද?

අභිමතානුසාරී බලතල පාලනය කිරීමේ අවශ්‍යතාව සහ පරිපාලන අධිකාරීන් විසින් අභිමතය භාවිත කිරීම පාලනය කිරීම සඳහා අධිකරණය වර්ධනය කළ රීති පිළිබඳව කෙටියෙන් සාකච්ඡා කරන්න.

(ලකුණු 20)

8. (අ) "අභියාචනය හා සමාලෝචනය අතර වෙනස වටහාගැනීම ඉතා වැදගත් වන්නේ එකී වචන දෙකට වෙනස් තේරුම් දෙකක් ඇති නිසා හා අධිකරණය විසින් පරිපාලන ක්‍රියාවන් සමාලෝචනය කිරීම පරිපාලන නීතියේ මූලික කාර්යයක් වන නිසා ය".

**පරිපාලන නීතිය, පිඹුව 01, ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය, 11 පිටුව**

අභියාචනය හා සමාලෝචනය අතර වෙනස්කම් දක්වමින් ඉහත ප්‍රකාශය කෙටියෙන් සාකච්ඡා කරන්න.

(ලකුණු 10)

(ආ) "ශ්‍රී ලංකාවේ 1978 ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ මූලික අයිතිවාසිකම් පරිච්ඡේදය හඳුන්වාදීම මගින් පරිපාලන ක්‍රියාවන් අභියෝගයට ලක්කිරීමේ නව ප්‍රවේශයක් වර්ධනය විය".

ඔබ මෙම ප්‍රකාශය සමඟ එකඟ වන්නේ ද?

පරිපාලන නීතියේ හා 1978 ශ්‍රී ලංකාවේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ තෙවැනි පරිච්ඡේදය යටතේ ඇති ප්‍රතිකර්මවල ගැටුම්කාරී ස්වභාවය සාකච්ඡා කරන්න.

(ලකුණු 10)

****හිමිකම් ඇවිරිණි****

**THE OPEN UNIVERSITY OF SRI LANKA**
**LL.B. DEGREE PROGRAMME -LEVEL 5**
**FINAL EXAMINATION: 2016/2017**
**LWU3311/LLU5709 – ADMINISTRATIVE LAW**
**DURATION: THREE (03) HOURS**

**Date: 18.07.2018** **Time: 01.30 p.m. to 04.30 p.m.**

**Answer five (05) Questions only.**
**Students are penalized for eligible hand writing.**

01. The Commissioner of Elections has been empowered under the Local Elections Act No 16 of 1999 of the State Utopia to declare candidates as elected members to local governments. Senaka had contested at the local election of the *Samagipura* Municipal Council as a member of "United Peoples Party". After the election six member of his party were elected and he was the seventh in the list. Senaka found that there were only two votes gap between the candidate who was in sixth place namely Bhanuka who works as the private secretary of Financial Minister. Later he came to know that Bhanuka had visited polling booth four times on election day and he was the brother-in-law of Returning Officer.

    Since he was dissatisfied with the way preferential votes were counted at the counting centre, he made a written request to the Commissioner of Elections to re-count preferential votes. However, no action was taken by the Commissioner of Elections regarding his request. Meanwhile, dates have been fixed for the elected members to take oaths for the assumption of duties.

    Senaka seeks your advice as to whether he has any remedy against the Commissioner's arbitrary actions.

    Assuming that State Utopia's local government elections laws and general principles of Administrative Law are similar to that of Sri Lanka, advise Senaka.

    Support Your answer with decided cases.

(20 marks)

02. National Development Bureau is a statutory body established under a parliamentary Act of Catalonia. As per section 5 of the Act, it has powers to grant license to export fresh vegetable and fruit to any person who satisfies the requirements to obtain such a license. However, section 5(2) of the Act provides that no license should be granted for processed food without the approval of National Health Director.

Asanka who owns a vegetable and fruit farm applied for a license to export fruits. However, it was refused by the National Development Bureau stating that under section 5 no license can be granted for non-carbonic foods.

Meanwhile, Sudath was the main competitor of the fruit-exporting industry and national Development Bureau granted a license to Sudath to export mix-fruit jam to Canada without approval of National Health Director. Two weeks later, it was published in newspapers that Director General of the National Development Bureau was arrested by the Bribery Commission of Catalonia for his involvement in doing underhand transactions with Sudath.

Asanka wishes to file legal actions against the decisions of National Development Bureau.

Identify the issues arising from the conduct of National Development Bureau and discuss them in the light of appropriate principles of Administrative Law.

(20 marks)

03. "Section 217 (g) of the Civil Procedure Code of Sri Lanka does not empower District Courts to review and declare as null and void the decisions of the statutory bodies. The District Courts are empowered only to issue a declaration regarding the exercise of its original jurisdiction".

Discuss this statement with reference to Declaratory Order in Administrative Law.

Support your answer with decided cases.

(20 marks)

04. Bandara has been working as a supervisor at the National Tea Cooperation (NTC) of State Ramda for 15 years. Three weeks ago, unknown gang had entered the "*Sandagala Watta*" estate governed by the NTC and stolen a valuable machine. While checking the CCTV camera, Chief Security Officer found that Bandara had entered into "*Sandagala Watta*" estate on that day evening after the official working hours.

The management of the NTC appointed a three-member committee to inquire into the matter. Chief Security Officer also was appointed as a member of the inquiry committee. However, Bandara was not satisfied with the appointment of Chief Security Officer as both of them had engaged in a heated argument at a previous meeting regarding the installation of CCTV camera system in the work place.

Chairman of the inquiry committee issued a charge sheet to Bandara on Monday and was given time till 2.00 p.m. on the same day to appear before the inquiry committee. During the inquiry Chief Security Officer said that "we assume that you are also responsible for the robbery which took place three weeks ago at the *Sandagala Watta* estate". Bandara requested the committee to allow a legal representative to cross examine the witness. The Committee turned down his request.

Final decision of the committee was to dismiss Bandara from service. Bandara was unhappy with this decision and he asked for reasons for his dismissal. However, committee did not respond to his request.

Now, Bandara wishes to challenge the decision of the committee of inquiry.

Assuming that the principles of Administrative Law of State Ramda is similar to that of Sri Lanka advise Bandara.

Support your answer with decided cases and contemporary developments of the Administrative Law in Sri Lanka.

(20 marks)

05. The Disaster Management Board is a statutory body established under the Disaster Management Act No 05 of 2000 of State Antoriad. The Board has powers *inter alia* to grant compensation for the reconstruction of buildings and houses damaged by any disaster. Section 4(4) of the Act declares that "the **decision of the board is final and conclusive**

**and cannot be challenged in any court of law**". However, section 5(1) further states that the Board is empowered to grant compensation only after obtaining an assessment report from the Government Assessor.

Waruna, a resident of a flood-affected area in Ratanpoor in State Antoriad applied for compensation for reconstruction of his building damaged by the flood situation.

However, chairperson of the Board rejected his application and refused to give any reason for the rejection. Meanwhile, it was published in newspapers that chairperson of the Board has paid compensation to supporters of a political party without obtaining a report from the Government Assessor.

Two weeks later, the chairperson of the Board has made a statement at a press conference that as per section 4(4) of the Act, no one can question his duties.

Assuming that a statute similar to the Interpretation Ordinance of Sri Lanka is operative in Antoriad, advise Waruna whether he could challenge the decision of the chairperson of the Disaster Management Board.

Discuss your answer in the light of decided cases.

(20 marks)

06. "Under the constitutional foundation of the judicial power any administrative action can be questioned by the court of law. However, direct and indirect methods are adopted by Parliament to restrict the judicial review of administrative action".

Do you agree with this statement? Discuss your answer with appropriate decided cases.

(20 marks)

07. "Principles of Administrative Law recognize the justification of giving discretionary powers to administrative authorities as well as the necessity of controlling them in order to maintain rule of law in a country. Therefore, courts have developed many rules to control the exercise of discretion by administrative authorities".

**Administrative Law, Block 1, OUSL, at p54**

Do you agree with this statement?

Briefly discuss the necessity of controlling the discretionary powers and rules developed by courts to control the exercise of discretion by administrative authorities.

(20 marks)

08. (a) "Understanding the differences between appeal and review is very important because these
two terms have two different meanings and the judicial review of administrative action is a
primary concern of the Administrative Law".

**Administrative Law, Block 1, OUSL, at p11**

Briefly discuss above statement concerning the differences between appeal and review process.

(10 marks)

(b) "A new approach towards challenging administrative action has been developed in Sri Lanka
with the introduction of a fundamental rights chapter to the Constitution of Sri Lanka in
1978".

Do you agree with this statement?

Discuss the conflicting nature of the remedies under Administrative Law and chapter III of the 1978 Constitution of Sri Lanka.

(10 marks)

****All rights reserved****

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திற்கான பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 6
இறுதிப்பரீட்சை – 2016/2017
**LLU5709/LWU3311** – நிர்வாகச் சட்டம்
காலம் : **03** மணித்தியாலங்கள்

---

திகதி: 18.07.2018 | நேரம் : பி.ப 01.30 – பி.ப 04.30

---

வினாக்களின் மொத்த எண்ணிக்கை எட்டு (08)
ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்

01. உத்தோப்பியா நாட்டின் 16ஆம் இலக்க 1999 ஆம் ஆண்டின் உள்ளூராட்சித் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் தேர்தல்கள் ஆணையாளர் வேட்பாளர்களை உள்ளூராட்சி அரசாங்கங்களிற்கு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டமையை பிரகடனப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளார். சேனக என்பவன், "ஐக்கிய மக்கள் கட்சியின்" உறுப்பினராக சமகிபுர நகர சபைக்கான உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டான். தேர்தலின் பின் அவனது கட்சியின் ஆறு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், அவன் பட்டியலில் ஏழாவது இடத்தில் இருந்தான். சேனக, ஆறாவது இடத்தில் உள்ள நிதி அமைச்சருக்கு தனிப்பட்ட செயலாளராக கடமையாற்றும் பானுக என்பவனுக்குமிடையே இரு வாக்குகளின் இடைவெளி மட்டுமே நிலவியதைக் கண்டறிந்தான். பின்னர் அவன், பானுக தேர்தல்கள் தினத்தன்று வாக்குச் சாவடிக்கு நான்கு தடவைகள் சென்றிருந்ததுடன், அவன் அத்தேர்தல்கள் தெரிவு அத்தாட்சி அதிகாரியின் மைத்துனன் என்பதனையும் கேள்வியுற்றான்.

அவன், வாக்கு எண்ணும் நிலையத்தில் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்ட விதத்தில் அதிருப்தியுற்றதால், தேர்தல்கள் ஆணையாளருக்கு விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு எழுத்தில் வேண்டுகோள் விடுத்தான். எவ்வாறாயினும், அவனது வேண்டுகோள் தொடர்பில் தேர்தல் ஆணையாளரால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதேவேளை தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கடமையை ஏற்பதற்கான சத்தியப் பிரமாணத்திற்கான நாட்களும் குறிக்கப்பட்டுள்ளன.

சேனக, ஆணையாளரின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிராக அவன் ஏதேனும் நிவாரணம் கோர முடியுமா என உம்மிடம் அறிவுரை நாடுகிறான்.

உத்தோப்பியா நாட்டின் உள்ளூராட்சி ஆட்சி தேர்தல்கள் சட்டங்கள் மற்றும் நிர்வாகச் சட்டம் தொடர்பான பொதுவான விதிகள் என்பன இலங்கையை ஒத்தன எனக்கருதி, சேனகவிற்கு ஆலோசனை வழங்குக.

உமது விடையை தீர்க்கப்பட்ட வழக்குதாரணங்களால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

02. தேசிய அபிவிருத்தி பணியகம் ஆனது, கெடலோனா நாட்டின் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட உறுப்பு ஆகும். அச்சட்டத்தின் உறுப்புரை 5இற்கமைய, புதிய மரக்கறிகள் மற்றும் பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான உரிமத்தை, அவ் உரிமத்தை பெறுவதற்கான தேவைப்பாடுகளை திருப்தி செய்யும் எவரேனும் நபருக்கு வழங்கும் அதிகாரம் கொண்டது. எவ்வாறாயினும் அச்சட்டத்தின் பிரிவு 5(2) ஆனது

பதனிடப்பட்ட உணவிற்கு தேசிய ஆரோக்கிய பணிப்பாளரின் அங்கீகாரமின்றி உரிமம் வழங்கப்படலாகாது எனக் குறிப்பிடப்படுகிறது.

மரக்கறி மற்றும் பழப்பயிர்ப் பண்ணைக்கு சொந்தக் காரரான அசங்க என்பவன் பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான உரிமத்திற்கு விண்ணப்பித்தான். எவ்வாறாயினும் பிரிவு 5இன் கீழ் கார்பனிக் அல்லா உணவுகளிற்கு உரிமம் வழங்கப்பட மாட்டாது என்பது சுட்டிக்காட்டப்பட்டு தேசிய அபிவிருத்தி பணியகத்தால் மறுக்கப்பட்டது.

இதேவேளை, சுதத் என்பவன் பழ ஏற்றமதி துறையின் பிரதான போட்டியாளராக விளங்குவதுடன், அவன் கனடாவிற்கு பழக்கலவை பழப்பாகை ஏற்றுமதி செய்வதற்கான உரிமம், தேசிய அபிவிருத்தி பணியகத்தால் தேசிய ஆரோக்கிய பணிப்பாளரின் அங்கீகாரம் இன்றி, வழங்கப்பட்டது. இரு வாரங்களின் பின்னர், தேசிய அபிவிருத்திப் பணியகத்தின் பணிப்பாளர் கெடலோனாவின் இலஞ்ச ஊழல் ஆணையகத்தால், சுதத்துடனான அவரது மறைவான ஈடுபாட்டிற்காக கைது செய்யப்பட்டார்.

தேசிய அபிவிருத்தி பணியகத்தின் தீர்ப்புகளிற்கு எதிராக அசங்க, சட்ட நடவடிக்கைகளை எடுக்க விரும்புகிறான்.

தேசிய அபிவிருத்தி பணியகத்தின் நடத்தைகளில் இருந்து எழும் விடயங்களை இனங்கண்டு, தகுந்த நிர்வாகச்சட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் அவற்றை ஆராய்க.

(20 புள்ளிகள்)

03. "இலங்கை குடியியல் சட்டக் கோவையின் பிரிவு 217(9) ஆனது மாவட்ட நீதிமன்றகளிற்கு நியதிச்சட்ட உறுப்புகளின் தீர்மானங்களை மீளாய்வு செய்யவும் அவற்றினை வெற்றம் வெறிதானது எனப் பிரகடனப்படுத்தவும் அதிகாரம் அளிக்கவில்லை"

மேலுள்ள கூற்றை நிர்வாகச்சட்டத்தில் விளம்பற் கட்டளையை எடுத்தக்காட்டி ஆராய்க.

உமது விடையை தீர்க்கப்பட்ட வழக்ககளால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

04. பண்டார என்பவன் ரமடா நாட்டின் தேசிய தேயிலை கூட்டுறவு அமைப்பின் கண்காணிப்பாளராக 15 வருட காலமாக பணியாற்றுகிறார். மூன்று வாரங்களுக்கு முன், தேசிய கூட்டுறவு அமைப்பால் ஆளப்பட்ட "சண்டகல வத்த" தோட்டத்திற்கு நுழைந்த குழு, விலை மதிப்புள்ள உபகரணம் ஒன்றை களவாடியது. உட்சுற்று தொலைக்காட்சி (CCTV) இனை சோதனை செய்யும் போது, தலைமை பாதுகாப்பு அதிகாரி அன்றைய தினம் மாலை வேலை நேரதிற்கு பின் "சண்டகல வத்த" விற்குள் பண்டார சென்றிருப்பதைக் கண்டறிந்தார்.

தேசிய கூட்டுறவு அமைப்பின் முகாமைத்துவம் ஆனது இவ்விடயத்தை விசாரணை செய்வதற்காக மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை நியமித்தது. தலைமை பாதுகாப்பு அதிகாரியும் இவ்விசாரணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். எவ்வாறாயினும், உட்சுற்று தொலைக்காட்சியை (CCTV) வேலைத்தளத்தில் பொருத்துதல் தொடர்பான கடந்த கூட்டத்தில் தலைமை பாதுகாப்பு அதிகாரி, பண்டார, இருவரும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு இருந்தமையால் அவரது நியமனம் குறித்து பண்டார திருப்தியுறவில்லை.

திங்கட்கிழமை அன்று விசாரணைக் குழுவின் தலைவர் பண்டாரவிற்கு குற்றப்பத்திரம் வழங்கியதுடன் அதே நாளின் பி.ப 2.00 மணி வரை அவனிற்கு விசாரணைக் குழுவின் முன் தோன்ற காலம் வழங்கப்பட்டது. விசாரணையின் போது தலைமை பாதுகாப்பு

அதிகாரி "சண்டகல வத்த தோட்டத்தில் மூன்று வாரங்களிற்கு முன் இடம்பெற்ற கொள்ளைக்கு நீர் பொறுப்பாவீர் என நாம் கருதுகிறோம்" என்று கூறினார். பண்டார, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய சட்ட பிரதிநிதி ஒருவரை அனுமதிக்கமாறு வேண்டுகோள் விடுத்தார். விசாரணைக்குழு அவ்வேண்டுகோளை நிராகரித்தது.

விசாரணைக்கழுவின் இறுதித் தீர்மானம் பண்டாரவை சேவையில் இருந்து நீக்க வேண்டும் என்பதாகும். இத்தீர்பில் கவலையுற்ற பண்டார அவனது நீக்கத்திற்கான காரணங்களை கோரினான். எவ்வாறாயினும் விசாரணைக்குழு அவனது கோரிக்கைக்கு பதில் அளிக்கவில்லை.

தற்போது, விசாரணைக்குழுவின் தீர்ப்பை கேள்விக்குட்படுத்த பண்டார விரும்புகிறார்.

ரமடா நாட்டின் நிர்வாகச்சட்ட விதிகள், இலங்கையை ஒத்தன எனக் கருதி பண்டாரவிற்கு அறிவுரை வழங்கவும்.

உமது விடையை இலங்கையின் நிர்வாகச்சட்ட தீர்ப்புச் சட்டங்கள் மற்றும் சமகால விருத்தி என்பவற்றால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

05. ஆன்டோரியட் எனும் நாட்டின் 05ஆம் இலக்க 2000ஆம் ஆண்டின் இடர் முகாமைத்துவ சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நியத்திச்சட்ட உறுப்பு இடர் முகாமைத்துவ குழு ஆகும். இக்குழுவிற்கு ஏதேனும் இடரினால் சேதமுற்ற வீடுகள் மற்றும் கட்டிடங்கள் என்வற்றை மீள் நிர்மாணிப்பதற்கான நட்டயீட்டை வழங்கும் அதிகாரங்கள் உள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 4(4) ஆனது "குழுவின் தீர்மானம் இறுதியும் முடிவுமானது என்பதுடன் அதனை எந்நீதிமன்றத்திலும் கேள்விக்கு உட்படுத்த இயலாது" எனக் கூறுகிறது. எவ்வாறாயினும் பிரிவு 5(1) ஆனது அரசாங்க மதிப்பீட்டாளரிடம் இருந்து மதிப்பீட்டு அறிக்கையை பெற்றதன் பின் மட்டுமே குழுவிற்கு நட்டயீடு வழங்கும் அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கிறது.

அன்டோரியட் நாட்டின் ரடன்பூர் எனும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் வதியம் வருண என்பவன் வெள்ள நிலையால் சேதப்படுத்தப்பட்ட தனது கட்டிடத்தை மீள் நிர்மாணிப்பதற்காக நட்டயீடு கோரி விண்ணப்பித்தான்.

எவ்வாறாயினும், அக்குழுவின் தலைவர் அவனது விண்ணப்பத்தை நிராகரித்ததுடன், அந் நிராகரிப்பு தொடர்பில் ஏதேனும் காரணம் கூறவும் மறுத்தார். இதேவேளை, குழுவின் தலைவர் அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளர்களுக்கு அரசாங்க மதிப்பீட்டாளரிடம் இருந்து அறிக்கைப் பெறாமலே நட்டயீடு வழங்கியுள்ளதாக பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன.

இரு வாரங்களின் பின்னர், குழுவின் தலைவர் சட்டத்தின் பிரிவு 4(4) இற்கமைய எவரும் தன் கடமைகளை கேள்விக்கட்படுத்த இயலாது எனும் கூற்றை ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் முன் வைத்துள்ளார்.

இலங்கையின் பொருட்கோடல் கட்டளைச் சட்டத்தை ஒத்த ஒரு சட்டம் அன்டோரியட் இல் செயற்படுகின்றது எனக் கருதி, இடர் முகாமைத்துவக் குழுவின் தலைவரது முடிவை அவனால் கேள்விக்குட்படுத்த முடியுமா என வருணவிற்கு ஆலோசனை வழங்குக.

உமது விடையை தீர்க்கப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் ஆராய்க.

(20 புள்ளிகள்)

ation (NTC) of State
ndagala Watta"
the CCTV
atta"

06. "நீதித்துறை அதிகாரத்தின் அரசியலமைப்பு அடிப்படையின் கீழ் எந்த ஒரு நிர்வாக நடவடிக்கையும் நீதிமன்றால் கேள்விக்குட்படுத்த முடியும். எவ்வாறாயினும், நிர்வாக நடவடிக்கையின் நீதி மீளாய்வை மட்டுப்படுத்த பாராளுமன்றால் நேரடி மற்றும் மறைமுக முறைமைகள் ஏற்கப்பட்டுள்ளன".

இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? உமது விடையை பொருத்தமான தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. "நிர்வாகச் சட்ட விதிகள் நிர்வாக அதிகார சபைகளுக்கு தற்றுணிபு அதிகாரங்களை வழங்குவதை நியாயப்படுத்தலையும் நாட்டின் சட்டவாட்சியை பேணும் முகமாக அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான அவசியத்தையும் இனங்காண்கிறது. எனவே நிர்வாக அதிகார சபைகளாலான தற்றுணிபின் செயற்படுத்தலைக் கட்டுப்படுத்தும் முகமாக நீதிமன்றங்கள் பல விதிகளை விருத்தி செய்துள்ளன".

Administrative Law, Block1, OUSL, at p 54

இக் கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

தற்றுணிபு அதிகாரங்களை கட்டுப்படுத்துவதன் அவசியம் மற்றும் நிர்வாக அதிகார சபைகளால் தற்றுணிவு செயற்படுத்தப்படுதலை கட்டுப்படுத்த நீதிமன்றங்களால் விருத்தி செய்யப்பட்ட விதிகள் என்பனவற்றை சுருக்கமாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. (அ)"மேன் முறையீடு மற்றும் மீளாய்வு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை புரிதலானது, இவ்விரு சொற்களும் இரு வேறு அர்த்தங்களைக் கொண்டன என்பதுடன், நிர்வாகச் சட்டத்தின் அடிப்படை அக்கறையாக நிர்வாக நடவடிக்கையின் நீதித்துறை மீளாய்வு காணப்படுகிறது என்பதாலும் மிக முக்கியமானது ஆகும்'.

Administrative Law, Block1, OUSL, at p 11

மேன்முறையீடு மற்றும் மீளாய்வு நடப்படி என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் என்பன தொடர்பில் மேலுள்ள கூற்றை சுருக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) "1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளுக்கான அத்தியாயத்தின் அறிமுகமுடன் இலங்கையில் நிர்வாக நடவடிக்கையை கேள்விக்குட்படுத்துவதற்கான புதிய அணுகுமுறை ஒன்று விருத்தி செய்யப்பட்டுள்ளது".

இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் அத்தியாயம் III மற்றும் நிர்வாகச் சட்டத்தின் கீழ் நிவாரணங்களின் பிணக்குறும் தன்மையை ஆராய்க.

(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*